# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

# 2025



## භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

## Department of Treasury Operations

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

Ministry of Finance, Planning and Economic Development

# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2025

## செலவினத் தலைப்பு : 249

ஏ.எம்.எஸ். மல்காந்தி
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
011-2484729
dgto@tod.treasury.gov.lk

# உள்ளடக்கம்

பக்கம்


**அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம்/நிறைவேற்றுப் பொழிப்பு**

1.1 அறிமுகம் 01
1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள் 01
1.3 பிரதானசெயற்பாடுகள் 02
1.4 நிறுவனவிளக்கப்படம் 03
1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் 04

**அத்தியாயம் 02- முன்னேற்றம் மற்றும் எதிர்காலநோக்கு** 05 - 07

**அத்தியாயம் 03- வருடத்தின் நிதிச் செயலாற்றுகை**

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று 08
3.2 நிதிநிலைமைதொடர்பான கூற்று 09
3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று 10
3.4 நிதிக் கூற்றுக் குறிப்பு 11
3.5 வருமான சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை 12 - 13
3.6 வேறாக்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 13
3.7 நி.பி. 208 இற்கு அமைய வேறு அமைச்சு,திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களத்திற்கு/மாவட்டசெயலகம் /மாகாண சபைக்கு கையளிக்கப்பட்ட ஒதுக்கீடு 14
3.8 மூலதனமல்லாச் சொத்து அறிக்கையின் செயலாற்றுகை 14
3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 15

**அத்தியாயம் 04- செயலாற்றுகைச் சுட்டிகள்**

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைசுட்டி 16
(செயலாற்றுகை திட்டத்திற்கு அமைவாக)

**அத்தியாயம் 05- பேண்தகுஅபிவிருத்தி இலக்குகளை(SDG)அடையும் செயலாற்றுகை**

5.1 இனங்காணப்பட்ட குறிப்பிட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SGD) அடைந்துகொள்வதற்கானசெயலாற்றுகை 17 - 18
5.2 பேண்தகுஅபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் 19

**அத்தியாயம் 06- மனித வள விபரம்**

6.1 பதவியணிமுகாமைத்துவம் 20
6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையையின் அடிப்படையில் மனிதவள பற்றாக்குறை அல்லது மிகை விளைவுகள் 21
6.3 மனிதவள அபிவிருத்தி 23 - 29

**அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டுஅறிக்கை** 30 - 37

# அத்தியாயாம் 01 நிறுவன விபரம் / நிறைவேற்றுச் சுருக்கம்

## 1.1 அறிமுகம்

திரட்டு நிதியம், பொதுப்படு கடன் என்பவற்றின் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாள்வதற்கான வினைத்திறன் மிக்க நிறுவனக் கட்டமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களமானது, 2004 ஜூலை 28 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை தொழிற்பாட்டு ரீதியான காசு உட்பாய்ச்சலாகவும் வெளிப்பாய்ச்சலாகவும் மாற்றுவதுடன் கடன்களூடாக நிதியிடப்பட வேண்டிய வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகளை அடையாளம் காணும் பணியை திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மேற்கொள்கின்றது. இத்திணைக்களத்தின் பொதுப் படுகடன் முகாமைத் தொழிற்பாட்டில் அரசாங்கத்தின் சார்பில் படுகடன் சேவை மற்றும் அறிக்கைப்படுத்தல் என்பனவும் உள்ளடக்கப்படுகிறது.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்

### தூரநோக்கு

"தென்னாசியப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த அரசாங்க நிதி முகாமையாளராகத் திகழ்தல்"

### பணிக்கூற்று

"திரட்டு நிதியத்திற்கும் ஏனைய திறைசேரி நிதியங்களுக்கும் சொந்தமான நிதிகளைக் கையாள்வதில் வினைத்திறனையும் சிக்கனத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் உள்ளிட்ட நிதிக் கணக்கீட்டுக்கு தலைமைத்துவம் வழங்கும் அதேவேளை அரசாங்க செலவினங்களை அரசிறைத் திட்டங்கள் மற்றும் கடன்பெறுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ற வகையில் வரையறுப்பதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்."

### குறிக்கோள்கள்

- சட்டப்படி திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமைத்துவத்தினுள் அனைத்து அரச செலவு நிறுவனங்களுக்கும் தேவையான நிதியை வழங்குவதன் மூலம் வருடாந்த தேசிய வரவு செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவுதல்.

- வெளிநாட்டு நிதியுடனான கருத்திட்டங்களுக்காக திறைசேரி மட்டத்தில் நிதிகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அறிக்கையிடலுக்கான வசதிகளை வழங்குதல்.

- அரச வருமானம் உட்பட சகல கிடைப்பனவுகளையும் திறைசேரி பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு நாளாந்தம் சேகரித்தலை இலகுபடுத்துவதற்காக திறைசேரி தனிக் கணக்கு முறைமையை விரிவு செய்தல் / பரவலாக்குதல்.

- நிறுவனத்தின் நோக்கை ஆதாரமாகக் கொள்வதற்காக தொழில்மயத்துடனான ஊழியர்களின் செயற்றிறனை சான்றுபடுத்தி திணைக்கள ஊழியர்களின் செயற்றிறனை விருத்தி செய்தல்.

- நிறுவனத்தின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக தேசிய /சர்வதேச தரநிர்ணயத்தை பெற்றுக்கொள்வதனை இலகுவாகும் பொருட்டு திணைக்களத்தின் பணிகள் / செயற்பாடுகள் தரப்படுத்துதல்.

## 1.3 பிரதான செயற்பாடுகள்

- திறைசேரியின் காசுப் பாய்ச்சலை முகாமை செய்தல்.
- கொடுப்பனவு முறையின் ஊடாக திறைசேரி நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.
- செலவீட்டு முகவரகங்களுக்கான நிதிகளை மதிப்பீடு செய்தல், முன்னுரிமைப்படுத்துதல், விடுவித்தல்.
- துணைக்கடன் பெறுகை மற்றும் திறைசேரி ஏடுகளில் உள்ள உரிய பதிவுகளை பேணி வருதல்.
- இத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 12 வரியல்லா வருமானத் தலைப்புக்களுக்கான பிற அமைச்சுக்களினால் மற்றும் திணைக்களங்களினால் சேகரிக்கப்படும் வருவாய்களைக் கருத்திற் கொண்டு வருவாய் மதிப்பீட்டுக் கணக்குகளை தயாரித்தல்.
- ஊள்நாட்டு/வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் நன்கொடைகளின் கீழான நிதிகளின் விடுவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- உள்நாட்டு/வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கணக்கீட்டுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்தல்.
- அரசாங்கத்தின் கடன் பெறுகைக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கணக்கீடு மற்றும் கடன் சேவைகளுக்கான வசதியளித்தல் மற்றும் கணக்கீடு
- அரசாங்கத்தின் வங்கிக் கணக்குகளுக்கும் கட்டுநிதிக் கணக்குகளுக்கும் அங்கிகாரமளித்தலும் அவற்றை மேற்பார்வை செய்தலும
- அரசாங்க உத்தியோகத்தர் சொத்துக் கடன் உத்தரவாதத் திட்டத்தை செயற்படுத்துதல்
- வருமானங்களிலிருந்து மீள்நிதியளித்தல்
- கடன் கடிதங்களைத் திறப்பதற்கான பொறுப்பேற்புக் கடிதங்களை வழங்குதல்.
- அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைகளுக்கு சம்பளம் மற்றும் பிற தொடர்ச்சியான செலவுகளுக்கான நிதியை ஒதுக்குவதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
- ITMIS ஐ அறிமுகப்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் வசதி செய்தல்.
- பகிரங்க நிதி முகாமைத்துவ் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்களின்படி திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட இலக்குகளை அடைய நடவடிக்கை எடுத்தல்.
- மேற்குறித்த இலக்குகளின் செலவு/நிதி முகாமைத்துவம் தொடர்பான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குதல

## 1.4 நிறுவன கட்டமைப்பு



## 1.5 திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்

- **திரட்டிய நிதி முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் கணக்கு பிரிவு**

➢ திரட்டிய நிதி முகாமைத்துவ அலகு
➢ வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றும் பிரிவுகள் 01 ,02 ,03, 04 மற்றும் 05 அலகுகள்
➢ நிதிச் செயற்பாடுகள் மற்றும் கணக்கு அலகு
➢ வழங்கல்கள் மற்றும் கணக்குகள் அலகு

- **பொது படுகடன் முகாமைத்துவம் மற்றும் மறுசீரமைப்பு பிரிவு**

➢ வெளிநாட்டுக் கடன் அலகு 01
➢ வெளிநாட்டுக் கடன் அலகு 02
➢ உள்நாட்டுக் கடன் அலகு
➢ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானிய அலகு

- **காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் வருமானப் பிரிவு**

➢ காசுப் பாய்ச்சல் முகாமைத்துவ அலகு
➢ வருமான அலகு
➢ துணை கடன் மற்றும் கொடுப்பனவு மறுசீரமைப்பு பிரிவு
➢ புதிய பொருளாதார போக்குகளுடன் கூடிய இலக்குடைய திணைக்கள திட்டமிடல் பிரிவு
➢ தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி பிரிவு
➢ பிரதி திறைசேரி செயலாளரின் ஆதன காப்பு முகாமைத்துவ பிரிவு

- **முகாமைத்துவ பிரிவு**

➢ நிர்வாகப் பிரிவு

# அத்தியாயாம் 02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு

**விசேட அடைவுகள்**

I. அரச கணக்குகள் குழுவின் மூலம் நடாத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் திணைக்கள வகையீட்டின் கீழ் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டமை.

II. அரச கணக்குகள் குழுவின் மூலம் நடாத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் திணைக்கள வகையீட்டின் கீழ் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டமை.

III. அரச கணக்குகள் குழுவின் மூலம் நடாத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் திணைக்கள வகையீட்டின் கீழ் உயர் செயலாற்றுகை மட்டத்தினை அடைந்தமை.

IV. அரச கணக்குகள் குழுவின் மூலம் நடாத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் திணைக்கள வகையீட்டின் கீழ் சான்றிதழைப் பெற்றுக் கொண்டமை.

V. அரச கணக்குகள் குழுவின் மூலம் நடாத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் திணைக்கள வகையீட்டின் கீழ் உயர் செயலாற்றுகை மட்டத்தினை அடைந்தமை.

VI. 2018 ஆம் ஆண்டு, திணைக்களத்தின் நிதி செயலாற்றுகையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான கணக்காய்வு அபிப்பிராயத்தை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றமை.

VII. 2019 ஆம் ஆண்டு, திணைக்களத்தின் நிதி செயலாற்றுகையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான கணக்காய்வு அபிப்பிராயத்தை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றமை.

VIII. 2020 ஆம் ஆண்டு, திணைக்களத்தின் நிதி செயலாற்றுகையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான கணக்காய்வு அபிப்பிராயத்தை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றமை.

IX. 2021 ஆம் ஆண்டு, திணைக்களத்தின் நிதி செயலாற்றுகையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான கணக்காய்வு அபிப்பிராயத்தை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றமை.

X. 2022 ஆம் ஆண்டு, திணைக்களத்தின் நிதி செயலாற்றுகையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான கணக்காய்வு அபிப்பிராயத்தை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றமை.

XI. 2023 ஆம் ஆண்டு, திணைக்களத்தின் நிதி செயலாற்றுகையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான கணக்காய்வு அபிப்பிராயத்தை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றமை.

XII. 2024 ஆம் ஆண்டு, திணைக்களத்தின் நிதி செயலாற்றுகையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நியாயமான கணக்காய்வு அபிப்பிராயத்தை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றமை

XIII. கொவிட் சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் வகையில் TFMS நிகழ்ச்சித்திட்டத்தினைப் பயன்படுத்துகின்ற உத்தியோகத்தர்களுக்கு வீட்டில் இருந்து வேலை செய்யும் வகையில் நிகழ்நிலை முறைமையின் கீழ் திணைக்களத்தில் பயன்படுத்தப்படுகின்ற ''திறைசேரி நிதி முகாமைத்துவ முறைமையை'' மேம்படுத்தியமை.

XIV. (ITMIS) ஊடாக எல்லா அமைச்சுக்கள், மற்றும் திணைக்களங்களுக்கு கட்டுநிதி விடுவிக்கப்பட்டமை மற்றும் செயற்பாடுகள் வெற்றிகரமாக முகாமை செய்யப்பட்டமை

XV. இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச துறை திணைக்கள வகையின் கீழ் 2019 இன் அரச துறைக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருது வழங்கும் வைபவத்தில் 3 ஆவது இடத்திற்கான வெண்கல பதக்கத்தினை வென்றமை (APFASL).

XVI. இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச துறை திணைக்கள வகையின் கீழ் 2020 இன் அரச துறைக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருது வழங்கும் வைபவத்தில் 3 ஆவது இடத்திற்கான வெண்கல பதக்கத்தினை வென்றமை (APFASL).

XVII. இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச துறை திணைக்கள வகையின் கீழ் 2022 இன் அரச துறைக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருது வழங்கும் வைபவத்தில் இணக்கச் சான்றிதழை வென்றமை(APFASL).

XVIII. இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ட அரச துறை திணைக்கள வகையின் கீழ் 2023 இன் அரச துறைக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருது வழங்கும் வைபவத்திலஇணக்கச் சான்றிதழை வென்றமை (APFASL)

XIX. இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தினால ஏற்பாடு செய்யப்பட்ட அரச துறை திணைக்கள வகையின் கீழ் 2024 இன் அரச துறைக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருது வழங்கும் வைபவத்தில் 3 ஆவது இடத்திற்கான வெண்கல பதக்கத்தினை வென்றமை (APFASL)

**சவால்கள்**

I. சிறந்த பணத் தாங்கல் பரிபாலனம்

II. உபாய மட்டத்தில் உள்ள உத்தியோகத்தரகள் உள்ளிட்ட திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களும் வருடாந்த இடமாற்றத்திற்கு அமைவாக நாடு தழுவிய சேவைக்கு மற்றும் இணைந்த சேவைகளுக்கு உரிய உத்தியோகத்தர்களாக உள்ளமை.

III. போதியளவான தொழில்சார் திறனுடன் கூடிய பதவி நிலை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்ப முடியாமலுள்ளமை.

IV. நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலையிலும் திறைசேரியானது பணப்புழக்கத்தை நிர்வகித்தல்.

V. செப்டெம்பர் 2023 முதல் புதிய மத்திய வங்கிச் சட்டத்திற்கு இணங்க மத்திய வங்கியின் நிதியுதவி முற்றாக நிறுத்தப்பட்டதிலிருந்து நிதிச் சந்தையின் மூலம் கடன் சேவைக்குத் தேவையான நிதியைப் பெறுவதன் மூலம் திறைசேரியின் பணப்புழக்கத்தை நிர்வகித்தல

VI. பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட திறைசேரி மறுசீரமைப்பு மற்றும் தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி

**எதிர்கால இலக்கு**

I. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ முறைமைகள் (ITMIS) இனு் பூரண அமுல்படுத்தலுக்கு உதவுதல்

II. 2026 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்காள ISO:9001:2015 தரச் சான்றிதழைச் பெறுதல்

III. திணைக்களத்தை கணணிமயப்படுத்தலுக்கான மனித வள அபிவிருத்தி

IV. இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச துறை திணைக்கள வகையின் கீழ் 2025 ஆம் ஆண்டுக்கான அரச துறைக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருது வழங்கும் வைபவத்தில் 1 ஆவது இடத்திற்கான தங்க பதக்கத்தினை வென்றமை (APFASL).

**ஏ.எம்.எஸ் மல்காந்தி**
பணிப்பாளர் நாயகம்
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்




இலங்கை அரச நிதி கணக்காளர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2024 இன் அரச துறைக்கான சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருது வழங்கும் வைபவத்தில் 3 ஆவது இடத்திற்கான வெண்கல பதக்கத்தினை வென்றமை (APFASL).

## 3.1 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

## நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த
நிதிச் செயலாற்றுகைக் கூ

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| 164,092,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 199,670,467,662 | 201,884,986,657 | |
| **164,092,000,000** | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **199,670,467,662** | **201,884,986,657** | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 18,489,417,881 | 441,186,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 11,735,325,918 | 7,899,867,132 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 8,717,467 | 9,383,493 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **30,233,461,266** | **8,350,436,625** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **229,903,928,928** | **210,235,423,282** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | - | 42,876 | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **229,903,928,928** | 210,235,380,406 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 125,200,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 119,477,330 | 100,182,206 | |
| 3,037,400,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 2,375,625,505 | 25,695,579,325 | ஏசீஏ-2(ii) |
| 1,974,400,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 1,211,945,952 | 1,223,214,631 | |
| 2,989,700,000,000 | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | 2,500,674,315,570 | 2,689,500,439,526 | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| **2,994,837,000,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **2,504,381,364,357** | **2,716,519,415,688** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 2,000,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 1,194,010 | 1,623,269 | |
| 8,000,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 5,217,104 | 8,623,954 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 2,000,000 | திறன் விருத்தி | 14 | 1,218,524 | 649,915 | |
| 1,618,500,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 1,419,116,434,052 | 4,618,829,973,457 | |
| **1,618,512,000,000** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **1,419,124,063,690** | **4,618,840,870,595** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **7,729,577,118** | **8,098,835,913** | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **10,750,259** | **9,342,750** | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **7,740,327,377** | **8,108,178,663** | |
| **4,613,349,000,000** | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **3,931,245,755,424** | **7,343,468,464,946** | |
| - | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (** | | **(3,701,341,826,496)** | **(7,133,233,084,540)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையி** | | **(3,701,341,826,496)** | **(7,133,233,084,540)** | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | | | ஏசீஏ-3 |

## 3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

ஏசீஏ -பீ

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | உண்மை நிலை 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 83,972,501 | 99,622,955 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 18,928,170 | 16,895,379 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **102,900,671** | **116,518,334** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (9,515,673,689) | (5,511,957,679) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 83,972,501 | 99,622,955 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 9,534,601,859 | 5,528,853,058 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **102,900,671** | **116,518,334** |

பக்க இலக்கம் 07 முதல் 41 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 42 முதல் 48 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும
பதவி : செயலாளர் நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
திகதி : 27 02.2026

Dr. Harshana Suriyapperuma
Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Planning and Economic Development
Ministry of Finance
Colombo 01

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ஏ.எம்.[illegible]நி
பதவி : பணிப்[illegible]ம்
திகதி : [illegible].02.2026

A. M. S. MALKANTHI
Director General
Department of Treasury Operations
General Treasury
Colombo - 01.

ஏ.ஏ.ஐ.டில்ருக்ஷி
பணிப்பாளர்
திகதி : 20 .02.2026

A. A. I. DILRUKSHI
Director
Department of Treasury Operations
General Treasury
Colombo - 01.

## 3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | 2025 ரூபா | 2024 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 993,955 | 848,486 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 978,931,626 | 923,242,590 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 18,489,417,881 | 441,186,000 |
| முற்பணங்களை அறவிடல் | 8,371,115 | 8,035,201 |
| வைப்புக்களின் பெறுகை | 65,792 | 1,024,228 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **19,477,780,369** | **1,374,336,505** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 148,833,736 | 130,136,430 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 1,211,945,952 | 1,223,214,631 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு, மூலதன மாற்றங்கள், திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 2,412,534 | 2,273,184 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 541,688 | 624,506 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | 42,876 |
| முற்பணக் கொடுப்பனவு | 10,750,259 | 9,342,750 |
| வைப்புக் கொடுப்பனவு | 65,792 | 1,024,228 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **1,374,549,961** | **1,366,658,605** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **18,103,230,408** | **7,677,900** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம்இ கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 5,217,104 | 7,677,900 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | 5,217,104 | 7,677,900 |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | (5,217,104) | (7,677,900) |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | 18,098,013,304 | 0 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | | |
| **கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | 18,098,013,304 | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | | - |
| | 18,098,013,304 | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **(18,098,013,304)** | |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | - | |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | |

### 3.4 நிதிக் கூற்றுக் குறிப்பு

அறிக்கையிடலின் அடிப்படை

1) **தயார்படுத்தலின் நோக்கம்**

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2025 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

*

ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் ''அறிக்கையிடலின் அடிப்படை'' என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

**3.5 வருமானம் திரட்டுதல் செயலாற்றுகை - 2025**

| வருமானக் குறியீடு | விளக்கம் | வருமான மதிப்பீடு | | திரட்டிய வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | உண்மையான (ரூபா) | இறுதியானது (ரூபா) | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீட்டின் % |
| 2002.01.99 | ஏனையவை | 1,500,000,000.00 | 1,000,000,000.00 | 1,145,681,850.04 | 115% |
| 2002.02.01 | கடன் கொடுத்தல் | 9,580,000,000.00 | 10,100,000,000.00 | 10,190,546,787.28 | 101% |
| 2002.02.99 | ஏனையவவை | 15,000,000,000.00 | 48,500,000,000.00 | 61,837,837,784.18 | 128% |
| 2003.01.00 | திணைக்களங்களின் விற்பனை | 135,000,000.00 | 165,000,000.00 | 196,582,915.74 | 119% |
| 2003.02.99 | சில்லறைகள் | 7,500,000,000.00 | 7,370,000,000.00 | 7,693,346,850.62 | 104% |
| 2003.03.02 | அபராதம் மற்றும் பறிமுதல் - ஏனையவை | 3,000,000,000.00 | 3,457,000,000.00 | 4,515,805,765.55 | 131% |
| 2003.05.00 | திறைசேரி பிணை முறிகள் பிரீமியம் | 14,000,000,000.00 | 14,000,000,000.00 | 15,150,679,351.80 | 108% |
| 2003.99.00 | ஏனைய பெறுவனவு | 30,000,000,000.00 | 26,270,000,000.00 | 32,483,442,793.46 | 124% |
| 2005.99.00 | தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனையவை | 6,000,000,000.00 | 6,230,000,000.00 | 7,118,233,100.93 | 114% |
| 2006.04.00 | கடன்களை திரும்பப் பெறுதல் | 18,000,000,000.00 | 22,000,000,000.00 | 23,188,712,189.58 | 105% |
| 3001.01.00 | வெளிநாட்டு மானியங்கள் | 29,500,000,000.00 | 24,750,000,000.00 | 35,963,035,735.47 | 145% |
| 3001.02.00 | உள்ளூர் மானியங்கள் | 500,000,000.00 | 250,000,000.00 | 186,562,537.84 | 75% |

முதல் ஆறு மாதங்களில் உள்நாட்டு மானிய நிதியுதவி கருத் திட்டங்களுடன் தொடர்புடைய செலவினங்களை அறிக்கையிடாததால், அந்தக் காலகட்டத்தில் வைப்பு கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்ட மானிய நிதிகள் மற்றும் அந்தந்த திட்டங்களுக்கு கோரப்பட்ட ஒதுக்கீடுகளைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு மானிய வருமானத்தின் மதிப்பீடு ரூ. 250 மில்லியனாக திருத்தப்பட்டது. இருப்பினும், 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடுகள் கோரப்பட்ட சில கருத்திட்டங்கள் செயல்படுத்தப்படாததால், திருத்தப்பட்ட வருவாய் இலக்கை அடைய முடியவில்லை.




### 3.6 ஒதுக்கீட்டினை பயன்படுத்திக் கொள்வதற்கான செயலாற்றுகை

ரூபாய் 000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு இறுதி ஒதுக்கீட்டின் (%) ஆக |
|---|---|---|---|---|
| | உண்மை ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| ஒதுக்கீட்டுச் சட்டம் | | | | |
| மீண்டெழும் | 14,387,000 | 10,397,000 | 8,322,433 | 80.05 |
| மூலதனம் | 12,000 | 12,000 | 7,630 | 63.58 |
| கடன் சேவைகள் | 5,150,000 | 23,650,000 | 22,737,349 | 96.14 |
| **உபமொத்தம்** | **19,549,000** | **34,059,000** | **31,067,412** | **91.22** |
| விசேட சட்ட சேவை | | | | |
| மீண்டெழும் | 2,944,740,000 | 2,984,440,000 | 2,496,058,931 | 83.64 |
| கடன் சேவைகள் | 1,594,850,000 | 1,594,850,000 | 1,396,379,085 | 87.56 |
| **உப-மொத்தம்** | **4,539,590,000** | **4,579,290,000** | **3,892,438,016** | **85.00** |
| **முழுமொத்தம்** | **4,559,139,000** | **4,613,349,000** | **3,923,505,428** | **85.05** |

**3.7 நி.பி 208 இன் பிரகாரம், பிற அமைச்சு / திணைக்களத்தின் முகவராக இந்தத் திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகம் / மாகாண சபைக்கு வழங்கிய ஒதுக்கீடு**

| தொடர் இல | ஒதுக்கீட்டிற்குரிய அமைச்சு / திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பயன்படுத்தப்பட்டஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 01 | தேர்தல்கள் திணைக்களம் | தேர்தல் கடமைகள் கொடுப்பனவு | 542 | 542 | 542 | 100 |

**3.8 மூலதனமல்லாச் சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை**

| சொத்துக் குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2025 அன்று இருப்பு எடுப்பு அறிக்கையின் படி மிகுதி | 31.12.2025 அன்று நிதி நிலைமை அறிக்கையின் படி மிகுதி | எதிர்காலத்தில் கணக்கிட எதிர்பார்க்கப்படுபவை | முன்னேற்றம் % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் அமைப்பு | - | - | - | - |
| 9152 | இயந்திர உபகரணம் | 83973 | 83973 | - | 100 |
| 9153 | காணி | - | - | - | |
| 9154 | புலப்படாச் சொத்து | - | - | - | |
| 9155 | உயிரியல் ரீதியான சொத்துக்கள் | - | - | - | |
| 9160 | இடம்பெறுகின்ற வேலைகள் | - | - | - | |
| 9180 | குத்தகைச் சொத்துக்கள் | - | - | - | - |

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

இணைப்பு 1

## அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| குறியீட்டு சுட்டிகள் | ஏதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக(%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100% – 90% | 75% – 89% | 50% – 74% |
| 1. வருடாந்த கட்டுநிதி எல்லையினை தீர்மானித்தல் மற்றும் அவ்வெல்லையினை அரச நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தும் செயலாற்றுகை வீதம் | 100% | | |
| 2. மேற்கூறியவாறு கணக்கெடுக்கப்பட்ட வருடாந்த கட்டுநிதி எல்லை மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தும் செயலாற்றுகை வீதம் | 100% | | |
